முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S. No. 410/2017

2025–ம் வருடம் ஆகஸ்டு மாதம் 29–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: திரு. அந்தோணிசாமி (வா.சா.3) | தொழில்: |
| த/பெ: | இனம்: |
| கிராமம்: | வயது: |
| மாவட்டம்: | நாள்: 29–08–2025 |

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

1. நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து எந்த சர்வே எண், எந்த ஊரில் உள்ளது என்றால் வில்பட்டி பஞ்சாயத்து, சர்வே எண். 1354ல் உள்ளது. மேற்படி சர்வே எண் உட்பிரிவாக உள்ளது, அதில் 1354/1, 1354/3ம் சண்முக ஐயா பெயரிலும், 1354/2 என் தந்தை ஜோசப் பெயரிலும் உள்ளது. சர்வே எண். 1354/1, 1354/3 யாருடைய அனுபவத்தில உள்ளது என்றால் சண்முக ஐயா அனுபவத்தில் உள்ளது. என் தகப்பனார் உயிரோடு உள்ளரா என்றால் இல்லை, 2024ல் இறந்தார். என் தந்தை டெய்லி பிரட் கம்பெனியில் வேலை பார்த்தார். அப்போது 4ம் பிரதிவாதி அந்தோணி குருஸ் (சித்தப்பா முறை வரும்) கையெழுத்து போடவேண்டும் என்று சொல்லி என் தகப்பனாரை கொடைக்கானல் பதிவு அலுவலகத்திற்கு 1995ல் அழைத்து சென்று பவர் பத்திரம் எழுதி வாங்கினார். மேற்படி விபரம் என் தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். பின்னர் நானும் தந்தையும் சென்று 2010ல் அந்த பத்திரத்தை ஏமாற்றி வாங்கியுள்ளார்கள் என்று தெரிந்த பின்னர் ரத்து செய்தோம்.

2. 4ம் பிரதிவாதி நாங்கள் அந்த சொத்திற்கு அனுபவிக்க சென்றபோது எங்களை தடுத்தார். 2010லிருந்து சுமார் 10, 15 ஆண்டுக்கு முன்பு அவருக்கு என்

தந்தை குத்தகைக்கு விட்டியிருந்தார், அதை நாங்கள் கேட்கும்போது தான் அவர் மறுத்தார். என் தந்தை படிக்கவில்லை. மேற்படி தோட்டம் கேட்டு பிரச்சனை செய்தபோது என் தகப்பனாரிடம் ஏமாற்றி மேற்படி பவர் பத்திரம் எழுதிய விபரம் தெரியவந்தது, உடனடியாக ரத்து செய்துவிட்டோம். பவரை ரத்து செய்தபின்னர் என் தந்தை ஸ்ரீதர் ரெட்டிக்கு கிரைய ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்தார். வருடம் ஞாபகமில்லை. ( நான் 6ம் வகுப்பு தான் படித்துள்ளேன். )

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.